# News Paper Articles About the Opening of the Palm-leaf Manuscript Preservation and Conservation Unit

## පේරාදෙණිය සරසවි පුස්කොළ පොත් සංරක්ෂණ ඒකකය විවෘත කිරීම හෙට

*සිරිල් විමලසුරේන්ද්‍ර*

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලයේ පුස්තකාලයේ පුස්කොළ පොත් සංරක්ෂණ ඒකකය හෙට (15 වැනිදා) විවෘත කිරීමට විශ්වවිද්‍යාලයේ අධිකාරිය පියවර ගෙන තිබේ.

පුස්කොළ පොත් සංරක්ෂණ ඒකකය හෙට පෙරවරුවේ උපකුලපති මහාචාර්ය උපුල් බී. දිසානායක මහතා අතින් විවෘත වෙයි.

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලයේ විවෘත වන මෙම පුස්කොළ පොත් එකතුව ශ්‍රී ලංකාවේ දෙවන විශාලතම පුස්කොළ පොත් එකතුව ලෙස සලකනු ලැබේ. එහි පුස්කොළ පොත් එකතුව පන්දහස් දෙසියයක් පමණ වෙතැයි පවසති. මහා වංශය, රාජාවලිය, විසුද්ධි මග්ගය, පන්සිය පනස් ජාතක පොත් වහන්සේ මෙන්ම දේශීය වෛද්‍ය ගුප්ත විද්‍යාව, පුරාතන සිංහල සාහිත්‍යය, සන්නස් පත්‍ර, දේශීය කලා, ඇතුළු දුර්ලභ ගණයේ දේශීය මූලාශ්‍ර රැසක අත් පිටපත්ද මෙම ඒකකයට ඇතුළත් වෙයි. පිටු වශයෙන් පිටු 250,000 ඉක්මවයි.

මෙම සංරක්ෂණ අංශයට පුස්තකාල පොත් කළ මැදීමේ අංශයක්ද ඇතුළත් වෙයි. පේරාදෙණිය විශ්වවිද්‍යාලයේ පුස්තකාලයට දීර්ඝ කාලයක අවශ්‍යතාවක් සපුරාලීම සඳහා විශ්වවිද්‍යාලයීය වැඩබලන පුස්තකාලායාධිපති ආර්. මහේෂ්වරන් මහතාගේ සහ කලා පීඨාධිපතිවරයා ඇතුළු විද්වතුන්ගේද ජාතික ලේඛනාරක්ෂක දෙපාර්තමේන්තුව, ශ්‍රී ලංකා ජාතික පුස්තකාලය ඇතුළු අංශ රැසක සහාය ලැබුණු බව විශ්වවිද්‍යාලය පවසයි.

தினகரன் ePaper

100%

# பேராதனை பல்கலையில் இன்று 'ஓலைச்சுவடிகள்' அங்குரார்ப்பணம்

**(கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)**

பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலகத்தின் புதிய பிரிவான ஓலைச் சுவடிகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு இன்று (15) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. நூலகர் இரா மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்யவுள்ளார்.

இலங்கையில் கலாசார மற்றும் அறிவு சார் பாரம்பரிய பொக்கிஷமாக போற்றப்படும் ஓலைச்சுவடிகளை பாதுகாப்பது தேசிய ரீதியான ஓர் உன்னத கடமையாக கருதப்படுகிறது. இலங்கையை பொறுத்தளவில் தேசிய நூதனசாலைக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய ஓலைச்சுவடிகள் சேகரிப்பினை பேராதனைப் பல்கலைக்கழக பிரதாக நூலகம் கொண்டுள்ளது.

ஏறத்தாழ 5200க்கும் மேற்பட்ட இவ் ஓலைச்சுவடி சேகரிப்பில் மகாவம்சம், இராஜாவலிய, விசுத்திமார்கம், ஜாதக கதைக்கொத்து உட்பட தேசிய வைத்தியம், மாயா மந்திர வித்தைகள் புராதன சிங்கள இலக்கியங்கள்,கலைகள், சாசனங்கள் போன்ற அறிய விடயங்கள் அடங்கியுள்ளன.

இத்திட்டத்திற்கமைய ஏறத்தாழ இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஏடுகள் பராமரிப்பு, பாதுகாப்பு செயன்முறைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

Produced by Lake House Copyright © 2013-2014 The Associated Newspapers of Ceylon Ltd.

# பேராதனைப் பல்கலை. பிரதான நூலகத்தில் ஓலைச் சுவடிகள் பாதுகாப்புப் பிரிவு

## இன்று ஆரம்பம்

**செங்கடகல நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலகத்தின் புதிய பிரிவான, ஓலைச் சுவடிகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

நூலகர் இரா. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அங்குரார்ப்பணம் செய்யவுள்ளார்.

இலங்கையில் கலாசார மற்றும் அறிவுசார் பாரம்பரிய பொக்கிஷமாகப் போற்றப்படும் ஓலைச்சுவடிகளை பாதுகாப்பது தேசிய ரீதியான ஓர் உன்னத கடமையாகக் கருதப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தளவில் தேசிய நூதனசாலைக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய ஓலைச்சுவடிகள் சேகரிப்பினை பேராதனைப் பல்கலைக்கழக பிரதான நூலகம் கொண்டுள்ளது.

ஏறத்தாழ 5,200க்கும் மேற்பட்ட இவ் ஓலைச்சுவடி சேகரிப்பில் மகாவம்சம், இராஜாவலிய, விசுத்திமார்க்கம், ஜாதக கதைக்கொத்து உட்பட தேசிய வைத்தியம், மாய மந்திர வித்தைகள், புராதன சிங்கள இலக்கியங்கள்,கலைகள், சாசனங்கள் போன்ற அரிய பல விடயங்கள் அடங்கியுள்ளன.

இத்திட்டத்திற்கமைய ஏறத்தாழ இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஏடுகள் பராமரிப்பு, பாதுகாப்பு செயன்முறைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

மிக நீண்ட காலமாக தேசிய தேவையாகக் கருதப்பட்ட இப்பிரிவினது அவசியம் குறித்து பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் இரா. மகேஸ்வரன் பல்கலைக்கழக உபவேந்தர் உட்பட ஏனைய உயர் அதிகாரிகளுக்கு விதந்துரை செய்ததன் விளைவாக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இப்பிரிவை ஆரம்பிப்பதற்கு தேசிய சுவடிகள் காப்பக திணைக்கள மற்றும் தேசிய நூலக நிபுணர்கள்,உரிய பயிற்சிகளையும் திறன் வழங்குதல்களையும் மேற்கொண்டனர். இலங்கை பிக்கு பல்கலைக்கழக பதில் நூலகர் தில்ல பண்டார, பேராதனைப் பல்கலைக்கழக நூலக ஊழியர்களுக்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக நிபுணத்துவ பயிற்சிப் பட்டறை ஒன்றையும் நடத்தினார்.